[26th February 1969

நகரப் பஞ்சாயத்துகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1967 ஏப்ரல் முதல் 1968 ஜுன் வரை புதிதாக எத்தனை நகரப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன ?

மாண்புமிகு திரு. எம். முத்துசுவாமி : 92 பேரூராட்சிகள்.

Cauvery Sugar Mills, Tiruchi

* 59 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there was any strike in the Cauvery Sugar Mills at Tiruchy in October 1967;

(*b*) whether 1,200 tonnes of sugarcane was damaged thereby; and

(*c*) if so, the action taken thereon by the Government?

காவேரி சர்க்கரை ஆலை, திருச்சி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி காவேரி சர்க்கரை மில்லில் 1967 அக்டோபர் மாதத்தில் வேலை நிறுத்தம் நடந்ததா ?

(இ) இதனால் 1,200 டன் கரும்பு கெட்டுவிட்டதா ?

(உ) ஆம் எனில், அதன் மேல் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அரசிடம் விவரங்கள் இல்லை.

(உ) மாவட்ட ஆட்சித் தலைவரின் தலையீட்டினாலும், தற்காலிக வேலை நீக்க ஆணை திரும்பப் பெறப்பட்டதாலும், 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் அடிக்கடி நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் கரும்பு கெட்டுப்போகிறது என்று ஆலை அதிபர்களாலும், கூட்டுறவு ஆலை அதிகாரிகளாலும் கூறப்படுகிறது. கரும்பு வெட்டி ஸ்டாக் வைத்திருக்கும்போது ஸ்ட்ரைக் செய்வது சட்ட விரோதமானது என்று அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் : இது திடீரென்று ஏற்பட்ட ஒன்றாகும். அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கேற்ப அரசாங்கம் கவனித்து ஆவன செய்யும். இது அப்படிப்பட்டதல்ல.